EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 44

## கவிஞர் அ.வெண்ணிலாவின் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனை

*வி. எம். பெனாசிர் ஜெய்னப்*
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ் பல்கலைகழகம் தஞ்சாவூர்.*
*மின்னஞ்சல்:* transbahadur08@gmail.com
*நெறியாளர்: ஜெ. தேவி*
*பேராசிரியர்.*

## *முன்னுரை*

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு
முன் தோன்றிய மூத்த குடி"

எனப் புறப்பொருள் வெண்பா மாலை தமிழ் மொழியின் தொன்மையை நமக்கு கூறுகிறது. தமிழ் இலக்கியம் தொ.ன்மையானது. பண்பட்டது. வரலாற்றுச் சிறப்புடையது. எப்பொழுது தோன்றி வளர்ந்தது என்று அறுதியிட்டு கூற முடியாதஅளவுக்குப் பழைமையானது. அகம், புறம் எனப் பேசப்பட்ட தமிழிலக்கியங்கள் இன்றைய சமகால அளவில், கோட்பாட்டளவில் ஆழ வேரூன்றிப்பரந்து விரிந்து வளர்ந்தது காணப்படுகிறது. வடக்கே வேங்கடத்தையும் தெற்கே குமரியையும் கிழக்கும் மேற்கும் கடலை எல்லையாகக் கொண்டிருந்தது தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் நாட்டை

ஆண்டதோடு சங்கம் அமைத்து தமிழை வளர்த்தனர். கி.மு.500 முதல் கி.பி.200 வரையில் உள்ள காலம் சங்க காலம் என்று குறிப்பிடப்படுகிறது.

“ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக” (புறநானூறு 72)

என்னும் புறநானூற்று வரிகள் மூலம் மன்னர்கள் தமிழ் மொழியின் மீது கொண்ட பற்று காரணமாக புலவர்கள் தலைமையில் தமிழ் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளதை அறிய முடிகிறது.

## கவிஞர் அ.வெண்ணிலாவின் பெண்ணியச் சிந்தனை

தமிழ் இலக்கியத்தில் சமகால இலக்கியம் என்பது 1960 ஆம் ஆண்டிலிருந்து தொடங்குவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தற்கால தமிழ் இலக்கியமே சமகால மற்றும் நவீன கால தமிழ் இலக்கியம் என அழைக்கப்படுகிறது. சமகால இலக்கியத்தில் மரபுக்கவிதை, புதுக்கவிதை, நாவல், சிறுகதை, கட்டுரை, கடிதம் போன்ற இலக்கியங்கள் சிறப்புற்று விளங்குகின்றன .நவீன தமிழ் இலக்கியத்தில் வளர்ந்து வரும் கவிஞர் அ.வெண்ணிலா ஆவார். இவர் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பிறந்த இவர் ஒரு பள்ளி ஆசிரியர். தமிழ்இலக்கியத்தின் மேல் உள்ள பற்றின் காரணமாக கவிதைகள், கட்டுரைத் தொகுப்புக்கள், நாவல்கள் போன்றவற்றை வெளியிட்டுள்ளார். டாக்டர் மு.ராஜேந்திரன் இ.அ.ப.இ அவர்களோடு இணைந்து “வந்தவாசிப்போர்-250 எனும் வரலாற்று தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார். இவரது பதிப்புக்கள் இந்தி, ஆங்கிலம், தெலுங்கு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் விருது, நந்தி விருது போன்ற பல்வேறு விருதுகளும் பெற்றுள்ள வெண்ணிலா அவர்களின் கவிதை தொகுப்பில் உள்ள பெண்ணியக் கருத்துக்களை இங்கு காணலாம்.

தமிழ் இலக்கியத்தில் பெண் படைப்பாளிகள் வரவு மிகத் தொன்மையானது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிருபை சத்தியநாதன், சுஜாம்பிகை, விசாலாட்சி அம்மாள், கு.ப.சேதுஅம்மாள், வை.மு.கோதைநாயகி அம்மாள், மூவலூர் ராமாமிர்த்தம்மையார் என பெண் படைப்பாளிகளின் மரபு தொடர்கிறது. இவர்கள் பெண் படைப்பாளிகளாக இருந்தாலும் பெண்ணியக்கருத்துக்களுடைய படைப்புக்களை படைத்தவர் கவிஞர் அ.வெண்ணிலா ஆவார். தமிழில் பெரும்பான்மையான பெண்ணிப்படைபாளிகள் கவிஞர்களாகவே உள்ளனர். மாலதி மைத்திரி, தேன்மொழி, வல்மா, உமாமகேஸ்வரி,சுகிர்தா ராணி, இளம்பிறை, சிவகாமி, பாமா போன்றோர் பெண்ணிப்படைபாளிகள் ஆவார்கள்.

## கவிஞர் அ.வெண்ணிலாவின் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனை

பெண் கல்வியைச் சமுதாயம் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு பணி வாய்ப்பினை வழங்கினாலும் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் தான் படிக்க செல்லவேண்டும். அவ்வாறு சென்றால் மட்டுமே பள்ளிப்படிப்பினை தொடர முடியும் என்பதனை தனது கவிதையில் அ.வெண்ணிலா அவர்கள் துரோகத்தின் நிழல் என்ற கவிதை தொகுப்பில் இவ்வாறு கூறுகிறார்.

அங்க நின்று பேசின
இங்க நின்று பேசினன்னு
பேச்சு வந்தது
படிச்சது போதுமுன்னு
சோறாக்க வேண்டியதுதான்
அங்க பார்த்தேன்
இங்க பார்த்தேன்
இப்படி தொட்டேன்னு
யார்கிட்டாவது சொன்ன
பள்ளிக்கூடம் வரமுடியாது. (துரோகத்தின் நிழல் ப.10)

ஒரு குடும்பத்திலிருந்து மற்றொரு குடும்பத்திற்குப் பெண்ணை மாற்றுகின்ற திருமணம் அவளுக்கு முதன்மையும் முழுமையுமானதாகக் கருதப்படுவதோடு திருமணம் சமுதாயத்தில் அவள் தொடர்ந்து மதிப்புடன் வாழ்வதற்கும் தேவைப்படுகிறது. திருமணம் ஆண், பெண் இருவருக்குமே உரியவொன்றுதான். இருவருடைய வாழ்விலும் முக்கிய இடம் பிடித்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆயினும் பெண்ணின் வாழ்க்கையில் திருமணம் அவள் எதிர்காலத்தை நிர்ணயம் செய்யும் நிகழ்ச்சியாகவும், அவள் வாழ்க்கையை முழுமையாக்கும் ஒரு நிறுவனமாகவும் சமூகத்தில் மதிக்கப்படுகிறது. இதனை இசைக்குறிப்புகள் நிறைந்த மைதானம் என்ற கவிதை நூலில் வெண்ணிலா இவ்வாறு குறிப்பிடுகிறார்.

“தேநீரின்
திடம், மணம், ருசியைவிட
அருந்தும் மனநிலையே
குடிப்பதின் திருப்தியாகிறது
தேநீர் அருந்தியபடி
நிச்சயிக்கப்படும் உறவில்
மழை நாளொன்றின் ஈரம்
உட்பொதிந்திருக்கக்கூடும்” ( இசைக்குறிப்புகள் நிறைந்த மைதானம் ப.20)

முதல் ரத்தம் பாத்து
கலங்கி
பாதி வகுப்பில் வெளியேறும்
பெண் ஒரு செவிலித் தாய்க்கான
பிரியத்தைவிட்டுச் செல்கிறாள்
தன் வகுப்பறையிடம் (துரோகத்தின் நிழல்)

மேலே உள்ள இந்த கவிதை 23.2.2011 ஆனந்த விகடன் இதழில் வெளியான இக்கவிதையைப் படித்த அன்றைய திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் டாக்டர் மு.ராஜெந்திரன் இ.ஆ.ப. அவர்கள் பள்ளிகளில் பெண் குழந்தைகளின் கழிப்பறை பிரச்சனையை நீக்குவதற்கான முதல்கட்ட நடவடிக்கையாக வந்தவாசி அரசு பெண்கள் மேலினைப்பள்ளிக்கு 12 கழிப்பறைகள் கட்டுவதற்கு ரூ.8.40 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கினார்.

சமூதாயம் வகுத்துள்ள சில வரையறைகளை மீற விரும்பாத மனப்பாங்கு இவரது கவிதைகளில் தெரிகிறது. இன்று கல்வி மற்றும் வேலைவாய்ப்பு அதிகரித்திருப்பதன் காரணமாகப் பல பெண்களின் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சுயசார்புத் தன்மையுடனும் பயமில்லாமலும் பெண்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் கல்விபெற்ற பெண்களுக்குச் சமூக அங்கீகாரம் கிடைப்பதில் பிரச்சினை உள்ளது. பெண்களின் கல்விக்கான தேடல்கள் அதிகரிக்கும் அதே வேளையில் அவர்களுக்கு உளவியல் ரீதியிலான பிரச்சினைகளும் வலுவாக அதிகரிக்கத் தொடங்கி உள்ளது.. இதற்கு காரணம் பெண்கள் கல்வி மூலம் ஒரு புதிய உலகைத் தரிசிக்கும்போதிலும், அதற்குத் தகுந்தாற்போல் ஆண்கள் சமூக தீதியாகத் தங்களைத் தயார்செய்து கொள்ளாததுதான். வெண்ணிலா தன் கவிதை ஒன்றில் இவ்வாறு கூறுகிறார்.

“வாயிற்படிகள்
வழிகாட்டுகின்றன
வீதிகளுக்குச் செல்ல ஆதனால் வரலாறு
பாதைகளைப் பற்றயதல்ல”
(இசைக்குறிப்புக்கள் நிறைந்த மைதானம்)

பெண்கள் சமூதாயத்தில் படும் இன்னல்கள், பாலியல் சீண்டல்கள், குடும்ப வன்முறைகள், சமுதாயத்தில் அங்கீகாரமின்மை போன்றவற்றை எதிர்த்து பெண் வெகுண்டு எழ வேண்டும் என்று கவிஞர் வெண்ணிலா அவர்கள் தன் கவிதை வரிகள் மூலம் விளக்குகிறார்.

"பெண்ணே பேசு
தெறிக்கும் உன்னின் ஒரு சொல்
பூமியை பிளக்கட்டும்
உன்னின் ஒரு சொல்லை
ஆண்மையின்
இருள் பகுதியில் இருந்து சுரண்டி எடு
உன்னுடன் தனித்திருக்கும்
உன் கணவனின்
இயலாமையிலிருந்து பொறுக்கி எடு
அறிவு பெருந்தீயாய் பெருகும் போது
தீய்ந்து கருகும் அழுகுரல்களில் சேகரி
பெருக்கெடுத்தோடும்
அன்பின் பேராற்றங்கரையில்
நக்கி நீரருந்த முடியா நாயின்
தாகத்திலிருந்து
கிளைக்கட்டும் உன் சொல்
பெண்ணென்ற போதாமையில்
உன் சொற்கள்
நழுவி விலகத் தொடங்கினால்
அச்சம் கொள்ளாதே பெண்ணே" (துரோகத்தின் நிழல் ப 38)

## தொகுப்புரை

1. நவீன தமிழ் இலக்கியத்தில் பெண்களின் வாழ்வியல் நெறிகளையும் பண்பாட்டையும், சமூகத்தில் அவர்கள் படும் துன்பைங்களையும் வெளிப்படுத்துவதாக வெண்ணிலாவின் கவிதைகள் அமைகின்றன.
2. பள்ளிக்குச் செல்லும் பெண்பிள்ளைகள் அவர்களின் உடல்ரீதியிலான துன்பங்களை தன் கவிதைவழியாக கூறுகிறார் வெண்ணிலா.
3. சமகால இலக்கியங்களான மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள்,நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் போன்றவைகளின் வாயிலாக பெண்ணியக் கருத்துக்களை கவிஞர் வெண்ணிலா கூறுவதுவதன் மூலம் தான் ஒரு பெண்ணியச் சிந்தனையாளர் என்பதை நமக்கு தெரிவிக்கிறார்.
4. பெண்கள் சமுதாயத்தில் படும் இன்னல்கள் பற்றி தமது கவிதைகள் மூலம் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகிறார் அ.வெண்ணிலா.
5. அன்றாடக் காட்சிகளை எளிய சொற்கள் மூலம் கவிதையாக்கும் வெண்ணிலாவின் முயற்சி சிறப்பானதாகும்.

## முடிவுரை

பெண் கவிஞர்கள் தங்கள் அனுபவங்களை எழுதுவதன் மூலம் தங்களது இருப்பை, வெளியைத் தீர்மானிக்கிறார்கள். ஆணுக்கு எதிரான புதுவரலாற்றும் மாற்று வரலாறு ஒன்றை கட்டமைக்க பெண்ணிய கவிஞர்கள் முயல்கின்றனர். மேலும் பெண்களுக்கு கல்வி மூலம் சமூக விழிப்புணச்சியை ஏற்படுத்தி அவர்கள் வாழ்வில் பெரிய மாற்றத்தை உண்டாக்கும் அதேவேலையில், அவள் மூட நம்பயிலிருந்து வெளியேற வேண்டும் என்கிறார் வெண்ணிலா. கடந்த பதினைந்து வருடங்களாகக் கவிதை எழுதும் வெண்ணிலா விற்கெனத் தனிப்பட்ட மொழி கைவரப்பெற்றுள்ளது. பூடகப்படுத்துதல் அல்லது மர்மப்படுத்துதல் மூலம் கவிதைகயைச் செறிவாக்குதல் என்பதை பொதுவாகக் கவிதையாக்கத்தில் இவர் வெளிப்படுத்துவதில்லை. மாறாக எளிய சொற்களில் கவிதை வடிப்பதை வழக்கமாக கொண்டுள்ள இவரது கவிதை மொழிகள் பாசாங்கு அற்று உள்ளது. நவீன தமிழ் இலக்கியத்தில் தனக்கென ஒரு இடத்தை வைத்துள்ளார் அ.வெண்ணிலா அவர்கள்.

## அடிக்குறிப்பு நூல்


1. எரியத்துவங்கும் கடல்
2. இசைக்குறிப்புக்கள் நிறைந்த மைதானம்)
3. துரோகத்தின் நிழல் (கவிதைத் தொகுப்பு நூல்கள்)
4. அகநி வெளியீடு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்